**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **25.10.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**தாவர மரபியலில் உயிரி தகவலியல், தரவு பகுப்பாய்வு மற்றும் புள்ளி விவரங்களின் முக்கியத்துவம் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம்**

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து, "பெரிய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவின் சகாப்தத்தில் தாவர மரபியல்" ஒரு நாள் கருத்தரங்கம் 25.10.2025 இன்று நடத்தியது. 150–க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்தனர். மைஜென் இன்ஃபர்மேடிக்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர். சுமந்த் முட்டே அவர்கள் சிறப்புரையாற்றினார்.

நவீன உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் ஆராய்ச்சியில் சிக்கல்களைத் தீர்ப்பதில் புள்ளிவிவரங்களின் முக்கியத்துவத்தையும் நடைமுறை பயன்பாடுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. மரபணுவியல் ஆய்வுகள் மூலம் உருவாக்கப்படும் ஏராளமான உயிரியல் தரவுகளை, புள்ளிவிவர அணுகுமுறைகளைப் பயன்படுத்தி எவ்வாறு திறமையாக செயலாக்கி விளக்க முடியும் என்பதை அவர் விளக்கினார். இது புரோபயாடிக்குகளின் வளர்ச்சி, மண் நுண்ணுயிரியல் மற்றும் மரபணு பகுப்பாய்வு போன்ற பகுதிகளில் முக்கியமானது என கூறினார்.

உயிரித் தகவலியல் துறையில் உலகளாவிய வாய்ப்புகள் குறித்த நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டு, உயிரியல், கணினி அறிவியல் மற்றும் புள்ளிவிவரங்களின் கலவையானது மாணவர்களுக்கு பல்வேறு தொழில் பாதைகளைத் திறந்துவிட்டது என்பதை வலியுறுத்தி, உயிரித் தொழில்நுட்பம் மற்றும் தரவு அறிவியல் துறைகளின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வலுவான பகுப்பாய்வு மற்றும் கணக்கீட்டு திறன்களை வளர்த்துக் கொள்ள பங்கேற்பாளர்களை அவர் ஊக்குவித்தார். மேலும், முனைவர். சுமந்த் முட்டே அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடலில் தொழில் வாய்ப்புகள், திறன் மேம்பாடு மற்றும் உயிரி தகவலியலில் எதிர்கால போக்குகள் குறித்து மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

தொடக்க நிகழ்வில் முனைவர். எல். அருள், பேராசிரியர் மற்றும் தலைவர், உயிரி தொழில்நுட்ப தகவலியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் வரவேற்புரை நிகழ்த்தினார். உயிரி தொழில்நுட்ப சிறப்பு மையம் மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் என். செந்தில் தொடக்க உரையாற்றினார். முனைவர். ஈ. கோகிலாதேவி தலைவர் மற்றும் பேராசிரியர், தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை முனைவர் கே. ஹேமாப்ரபா, இணை பேராசிரியர் மற்றும் முனைவர் வி. ராஜன்பாபு, உதவி பேராசிரியர், தாவர உயிரித்தொழில்நுட்ப துறை ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**